# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 190 /பேரூ/2024**
**நாள் : 25.01.2025**

திரு. P. முருகானந்தம்,
வத்தலக்குண்டு,
திண்டுக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1. செயல் அலுவலர்,
சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

2. திருமதி. M. விஜயா,
வத்தலக்குண்டு,
திண்டுக்கல் மாவட்டம் – எதிர் மனுதாரர்கள்

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு, கதவு எண்.7-4-6 தெற்கு தெரு என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. P. முருகானந்தம் என்பவரது 02.09.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.09.2024 அன்று பெறப்பட்டு, 190/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு, கதவு எண்.7-4-6 தெற்கு தெரு என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. P. முருகானந்தம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 02.09.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சியில் உள்ள கண்ணன் நகரில் வசித்தும் திருமதி. எம். விஜயா (க/பெ முத்துகாமாட்சி) என்பவர் 25.11.1993அன்று சேவுகம்பட்டி கிராமம் புல எண்.1139/3 1139ல் 58 x 16 = 928 சதுரடி புஞ்சை இடம் திருமதி. மோட்ச மேரியம்மாள் என்பவரிடம் கிரையம் பெற்று அந்த இடத்தில் ஒரு வீடு

ஒன்றை கட்டி குடியிருந்து வந்தார். எங்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக நிலம் புல எண்.1140/1A, 1140/1E நிர்களில் 1 ஏக்கர் 78 செண்ட் இடமானது திருமதி. விஜயா வீட்டிற்கு அருகில் உள்ளது.

இந்நிலையில் எங்களுக்கு பாகவிஸ்தி சம்பந்தமான வழக்கு நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.190/2006, 50/2009 நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த தருணத்தில் திருமதி. விஜயா என்பவர் எங்களுடைய நிலத்தில் புல எண்.1140/1A நிரில் அத்துமீறி சுமார் 5 செண்ட் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து அதில் 2 வீடுகளை தனித்தனியாக கட்டி விட்டார். இது சம்பந்தமாக மேற்கண்ட சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர், மேற்படி நபரிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு போலியாக சொத்துவரி, கட்டட உரிமம் உற்பத்தி செய்து வீடு கட்ட சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்ட அனுமதி அளித்துள்ளார். இது சம்பந்தமாக நேரிலும், தபாலிலும் புகார் கொடுத்தும் செயல் அலுவலர் எந்தவிதமான நடவடிக்கை எடுக்காமலும், அலட்சியத்துடனும், அதிகார ஆணவத்துடனும் இருந்து வருகிறார்.

மேற்படி செயல், சட்டத்திற்கு புறம்பாக கையூட்டு பெற்றுக் கொண்டு முறைகேடாக சேவுகம்பட்டி செயல் அலுவலர் கட்டடம் கட்ட அனுமதித்துள்ளார். எதிரிடையாளர் திருமதி. விஜயா மீது நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்பை அகற்றி துறை ரீதியான சட்ட நடவடிக்கை எடுக்க பணிந்து வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 04.11.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

திரு. பொன். முருகானந்தம், என்பவர் 09.12.2023 நாளிட்ட தனது புகார் மனுவில், புல எண்.1140/1A எண்.1140/1Aல் சுமார் 5 செண்ட் நிலத்தை திருமதி. விஜயா என்பவர் ஆக்கிரமிப்பு செய்து 2 வீடுகள் கட்டியுள்ளதாகவும் கட்டட உரிமம், வீட்டுவரி மற்றும் மின் இணைப்பை ரத்து செய்ய கோரியும் புகார் தெரிவித்திருந்தார்.

திருமதி. விஜயா என்பவர் சேவுகம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.1139/3Dல் கட்டட வரைபட எண்.36/2012-13 நாள் 10.07.2012ல் முறையாக கட்டட அனுமதி பெற்று கட்டடம் கட்டியுள்ளார். வரி விதிப்பு எண்.2691ன்படி சுமார் 12 வருடங்களுக்கு மேலாக வீட்டுவரி செலுத்தி வருகிறார். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருவருக்கும் உரிய ஆவணங்களை பேரூராட்சி அலுவலகத்தில் கடந்த 28.10.2023ல் தேதியில் நேரில் சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பித்ததில் எதிர்மனுதாரர் திருமதி. M. விஜயா மட்டுமே நேரில் ஆஜராகி தங்களது ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் நாளது தேதி வரை தன்வசம் உள்ள முறையான ஆவணங்களை சேவுகம்பட்டி முதல்நிலை செயல் அலுவலரிடம் நேரில் சமர்ப்பிக்கவில்லை" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. P. முருகானந்தம் என்பவர் மற்றும் எதிர்மனுதாரரான திண்டுக்கல் மாவட்டம் சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் புகாருக்குள்ளான

திருமதி. விஜயா என்பவரும் 20.01.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரா் திரு. P. முருகானந்தம் என்பவா் 20.01.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமா்ப்பித்துள்ளாா்.

- திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டி , முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட கண்ணன் நகரில் திருமதி. ஆ. விஜயா என்பவா் சேவுகம்பட்டி கிராம புல எண்.1139/3, 1139/3D-ல் 928 சதுர அடி இடத்தை மோட்ச மேரியம்மாள் என்பவரிடம் கிரையம் பெற்று வீட்டை கட்டியுள்ளாா்.

- எங்களது பொது பாத்தியப்பட்ட பூா்வீக நிலம் எண்கள் 1140/1A1, 1140/1A2 மற்றும் 1140/E-இல் 1 ஏக்கா் 78 செண்ட் இடமானது திருமதி விஜயா என்பவரின் வீட்டிற்கு அருகில் உள்ளது.

- இந்நிலையில் எங்களுடைய புல எண்.1140/1Aல் திருமதி விஜயா என்பவா் அத்துமீறி சுமாா் 5 செண்ட் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து 2 வீடுகளை தனித்தனியாக கட்டி போலியான ரசீதுகள் வைத்து மின் இணைப்பை பெற்றுள்ளாா்.

- மேற்கண்ட திருமதி விஜயா கட்டியுள்ள வீட்டிற்கு சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சியால் விதிகளை மீறி சட்டத்திற்கு புறம்பாக கட்டட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

- எனவே திருமதி விஜயா என்பவரால் ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டடத்தை அகற்றவும் மற்றும் இதற்கு உடந்தையாக இருந்த பேரூராட்சி செயல் அலுவலா் மற்றும் திருமதி. விஜயா ஆகியோா் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளாா்.

6. எதிா்மனுதாரரும் மற்றும் புகாருக்குள்ளானவருமான திருமதி. M. விஜயா என்பவா் 20.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமா்ப்பித்துள்ளனா்:-

- திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட கண்ணன் நகரில் நாங்கள் சேவுகம்பட்டி கிராம புல எண்., 1139/3டி–இல் சுமாா் 1 சென்டு 16 அடி பரப்பளவு இடத்தை திருமதி மோட்ச மேரியம்மாள் என்பவரிடம் கிரையம் பெற்று வீட்டை 2012 ஆம் ஆண்டில் இரண்டு வீடுகளை கட்டியுள்ளோம்.

- மனுதாரா் புகாராக தெரிவிக்கும் புல எண்1140/1ஏ–ல் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்து கட்டடங்கள் எங்களால் கட்டப்படவில்லை.

- மனுதாரரின் புகாா் குறித்து வருவாய்த் துறை மூலம் அளந்து அத்துமால் செய்து அவ்விடத்தில் எங்களால் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்பட்டிருப்பின் அவற்றை அகற்றலாம் என்பதை இம்முறைமன்ற நடுவரின் முன் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளாா்.

7. எதிர்மனுதாரரான சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. அ. ரமேஷ்பாபு என்பவர் 20.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

- மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள எதிர் மனுதாரர் திருமதி. M. விஜயா என்பவர் சேவுகம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட கிராம புல எண்.1139/3Dல் கட்டடம் கட்டுவதற்கு கட்டட வரைபட எண். 36/2012-13 நாள் 10.07.2012ல் முறையாக கட்டட அனுமதி பெற்று கட்டடம் கட்டியுள்ளார்.

- மேற்படி கட்டடத்திற்கு 12 வருடங்களுக்கு மேலாக சொத்துவரி செலுத்தி வருகிறார். சொத்துவரி விதிப்பு எண்.2691 ஆகும்.

- மனுதாரர் திரு. P. முருகானந்தம் என்பவர் இதே புகாரினை 09.12.2023 நாளிட்ட தனது மனுவில் பேரூராட்சிக்கு சமர்ப்பித்தார். இதனை விசாரிக்கும் பொருட்டு மனுதாரர் திரு. P. முருகானந்தம் மற்றும் எதிர்மனுதாரர் திருமதி. M. விஜயா ஆகியோரிடம் தங்களது ஆதார ஆவணங்களை 28.12.2023 அன்று பேரூராட்சியில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதில், எதிர்மனுதாரரான திருமதி. M. விஜயா மட்டும் புல எண் 1139 தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்தார். ஆனால் மனுதாரர் திரு. P. முருகானந்தம் இந்நாள் வரை எவ்வித ஆவணமும் சமர்ப்பிக்கவில்லை.

- மனுதாரர் புகாராக தெரிவிக்கும் புல எண் 1140-ல் திருமதி. விஜயா என்பவரால் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டப்பட்டுள்ளது குறித்து வருவாய்த் துறையின் மூலம் அளந்து அத்துமால் செய்து ஆக்கிரமிப்பு ஏதும் இருப்பின் அதனை அகற்றிட வரும் 30 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், எதிர்மனுதாரரான புகாருக்குள்ளான திருமதி. M. விஜயா என்பவரின் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. P. முருகானந்தம் என்பவர் தனது 02.09.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட சேவுகம்பட்டி கிராம பட்டா எண்.3647ல் புல எண்.1140//Aல் அமைந்துள்ள மனுதாரரது பூர்விக நிலத்தில் திருமதி. M. விஜயா என்பவர் 5 செண்ட் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து 2 வீடுகளை தனித்தனியாக கட்டி போலியான ஆவணங்கள் மூலம் மின் இணைப்பும் பெற்றுள்ளார் என புகாராக தெரிவித்து, மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றவும் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன

செய்யுமாறும் கோரியுள்ளார். இதனையே மனுதாரர் தனது வாக்குமூலத்திலும் வலியுறுத்தியுள்ளார்.

மேற்காணும் புகாரினை குறித்து, புகாருக்குள்ளான திருமதி. M. விஜயா என்பவர் மனுதாரர் தெரிவிப்பது போல் புல எண்.1140.1Aல் எவ்வித ஆக்கிரமிப்பு செய்து கட்டடங்கள் கட்டப்படவில்லை எனவும், புல எண்.1139/3Dல் சுமார் 1 செண்ட் 16 அடி பரப்பளவு கொண்ட இடத்தை திருமதி. மோட்ச மேரியம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்று 2 வீடுகளை 2012ஆம் ஆண்டில் கட்டியுள்ளோம் என தெரிவித்திருப்பதை அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. மேலும் மனுதாரரின் புகாரினை குறித்து வருவாய்த் துறை மூலம் அளவீடு செய்து அவ்விடத்தில் தங்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பின் அவற்றினை அகற்றலாம் என்பதை உறுதிபட தெரிவித்திருப்பதையும் அவரது வாக்குமூலம் வாயிலாகவும் அறிய வருகிறது.

மனுதாரர் திரு. P. முருகானந்தம் என்பவர் இப்புகார் மனு தொடர்பாக ஏற்கனவே சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சியில் புகார் மனு சமர்ப்பித்ததில், 28.12.2023 அன்று மனுதாரர் திரு. P. முருகானந்தம் மற்றும் எதிர்மனுதாரர் திருமதி M. விஜயா ஆகியோர் நேரில் ஆஜராகி உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டதில், எதிர்மனுதாரர் திருமதி M. விஜயா என்பவர் புல எண்.1139 தொடர்பான தனது ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார். ஆனால் மனுதாரர் திரு. P. முருகானந்தம் எவ்வித ஆவணமும் சமர்ப்பிக்கவில்லை என்பதை செயல் அலுவலரின் அறிக்கையின் மூலம் தெரிய வருகிறது.

மனுதாரர் திரு. P. முருகானந்தம் மற்றும் எதிர்மனுதாரர் திருமதி M. விஜயா ஆகியோரின் முரண்பட்ட கருத்தினை தெரிவித்துள்ள நிலையில், பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி, மனுதாரர் புகாராக தெரிவிக்கும் புல எண்.1140 இடத்தினை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறியும் பொருட்டு, வருவாய்த் துறை மூலம் அளந்து அத்துமால் செய்து, அதனடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 25ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. P. முருகானந்தம்,
   7-4-6 தெற்குத் தெரு,
   வத்தலக்குண்டு – 624 202
   திண்டுக்கல் மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.
3. திருமதி. M. விஜயா,
வத்தலக்குண்டு, திண்டுக்கல் மாவட்டம்.
.4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – 28
4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (மு.கூ.பொ.)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032